| OS.No | 77/2020 (PW1) |
| --- | --- |
| நாள் | 29.07.2026 |
| பெயர் | ராஜகோபால் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எங்கள் மூலம் எங்கள் மூலம் பணி அமர்த்தப்பட்ட சீனிவாசன் என்பவருக்கு எதாவது கமிஷன் தொகை பெற்றோமா என்றால் இல்லை. வா சா ஆ 1 எங்களுடைய அலுவலக கடிதம் என்றால் ஆமாம். பிரதிவாதிகளுக்கு மேற்படி வாசா ஆ ஒன்று அனுப்பப்பட்டது அல்லது பெறப்பட்டது என்பதற்கு ஆவணம் உண்டா என்றால் அனுப்பிவிட்டோம் . அவ்வளவு தான். வா சா ஆ 1 ஆவணம் தபாலில் அனுப்பினோம். சாதாரண தபால் தான். வி.எஸ். சீனிவாசன் என்பவரை நாங்கள் ஆட்களை அனுப்புகிறோம் என்பதற்கு குறைந்தபட்சம் ஈமெயில் உண்டு என்றால் ஆமாம். அக்டோபர் எட்டாம் தேதி அவருக்கு பிடிஎஃப் ஃபைலாக அனுப்பியிருக்கிறேன். அவருடைய பயோடா அனுப்பியிருக்கிறேன். அக்டோபர் 8, மெயில் அனுப்பியதாக சொல்வதற்கு நீதிமன்றத்தில் ஆதாரம் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் ஆமாம். எக்ஸிபிட் ஏ ஒன் ஆவணம் செப்டம்பர் மாதம் அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண பத்திரிக்கையை அக்டோபர் 2019 தான் பிரதிவாதி எங்களை அனுப்பியதாக சொல்லியிருக்கிறோம் என்றால் தவறு. 2018 முதல் சர்வீஸ் செய்து வருகிறோம். நீதிமன்றத்தில் அதற்கான ஆவணம் என்ன தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அதற்கான கம்பெனி எனக்கு கொடுத்த காசோலை ரூபாய் 46,501 நான் ஆவணமாக அதை ஒப்படைத்திருக்கிறேன். நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேன். 2018 இல் எந்த ஆவணமும் ஒப்படைக்கவில்லை. சீனிவாசபிரசாத் எங்களை அணுகி கேட்டதற்கு ஏதேனும் ஆவணம் உண்டா என்றால் இமெயில் உண்டு. நீதிமன்றத்தில் அதை ஒப்படைத்திருக்கிறேனா என்றால் இல்லை. 2019 க்கு பின்னிட்டு ஹையர் செய்ததற்கு ஏதேனும் ஆவணம் உண்டா என்றால் இல்லை. ஆனால் பேமெண்ட் சம்பந்தமாக நான் ஃபாலோ செய்தேன். சீனிவாசன் என்னுடன் கடைசியாக தொடர்பு வைத்துக்கொண்டது 2020 ஆகும். சீனிவாஸ் என்பவருடன் எனக்கு பிணக்கு கிடையாது. பேச்சுவார்த்தை

உண்டா என்றால் உண்டு. சீனிவாஸ் மேற்படி கம்பனி உடன் தனக்கு வேலை சரியாக ஒத்து வரவில்லை என்று தெரிவித்தாரா என்றால் இல்லை. சீனிவாஸ் கம்பெனியில் சேர்ந்த உடன் எனக்கு எப்படி தகவல் தெரியும் என்றால் அவர் தான் வேலையில் சேர்ந்தவுடன் எனக்கு குறுஞ்செய்தி அனுப்புனார். 12.12.2019 ஆகும். குறுஞ்செய்தி எந்த தேதியில் அனுப்பியதாக சொல்கிறேன் என்றால் அனுப்பினார் தேதி நினைவில்லை. இரண்டு நிறுவனமும் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதால் வாய்மொழி பேச்சுவார்த்தை முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்றால் ஏற்படும். நாங்கள் கட்டணமாக 8.33% என்று குறிப்பிட்டிருப்பது வாய்மொழியா அல்லது எழுத்துப்பூர்வமான ஆவணத்தின் அடிப்படையிலா என்றால் எழுத்துப்பூர்வமாகத்தான். 25.02.2020 தவிர வேறு கடிதங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால் பிரச்சனை போய்க்கொண்டிருந்ததால் ரீஜாயின்ட்டர் நோட்டீஸ் அனுப்பினோம். 8.33% என்பதை நாங்கள் எடுத்துவிட்டோம் 17.02.2020. வழக்கறிஞர் மூலம் புதிதாக. ஃப்ரெஷ் பில் அனுப்பினோம். எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட டிரான்ஸ பிரச்சனையின் போது சீனிவாஸ் இதில் தலையிட்டாரா என்றால் இல்லை. வா சா 3 ஆவணத்தில். சீனிவாசன் தற்பொழுது உள்ள கம்பெனியிலேயே நல்ல நிலையில் இருக்கிறார் என்றும், அதனால் இதில் அவசரம் காட்ட வேண்டாம் என்று அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். வா சா ஆ மூன்று ஆவணத்தில் எனக்கும் பிரதிவாதிக்கும் நடந்த உரையாடலை பதிவு செய்யவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் ஆமாம். சீனிவாசனை தவிர விராதார் என்பவரை ரெக்கமண்ட் செய்திருக்கிறோம். அந்த கேண்டிடேட்டின் சிவி. பார்டிகுலர் அனுப்பினேனா என்றால் அனுப்பியிருக்கிறன் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அவர் கம்பெனியில் சேர்ந்து விட்டாரா என்றால் இல்லை. நேர்முகத் தோ்வு நடத்தவில்லை. அதற்கு காரணம் பிரதிவாதியா அல்லது விரார்தாரரா என்றால் காரணம். என்னால் சொல்ல இயலாது. நான் விரார்தாரரை பொறுத்து ஒரு மெசேஜ் அனுப்பியிருக்கிறேன். அதில் இன்னும் கால அவகாசம் எடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த பதில் நிறுவனத்தின் பதில் படி கொடுக்கப்பட்டது. அக்டோபர் 2019 வருடம் சீனிவாசன் உடன் எனக்கு கம்யூனிகேஷன் இருந்ததா என்றால் இருந்தது. அவர் வாட்ஸ்அப் மூலம் கம்பெனியில் சேர்வதற்கு விருப்பமில்லை என்று அனுப்பி இருக்கிறார் என்றால் ஆமாம். அது

பிரதிவாதி கம்பெனியை தான். பொறுத்து சொல்லியிருக்கிறார். பிரதிவாதி நிறுவனத்தின். மேன்பவர் ஏஜென்சி மற்றும் செலவுகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் பிரதிவாதி நிறுவனத்திற்கு ஒரு மெசேஜ் அதாவது இதனால் வரை சுமார் ₹25,00,000. சம்பாதித்திருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். ஜிஎஸ்டி செலுத்தியதற்கு ஆவணம் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் இல்லை. பணம் கொடுத்தால் மட்டுமே ஜிஎஸ்டி கட்டுவோம் இந்த கம்யூனிகேஷன் அனைத்தும் ஜிஎஸ்டிக்கு அனுப்புவோமா என்றால் இல்லை. நான் நாங்கள் சர்வீஸ் ப்ரொவைட் எதுவும் கொடுக்கவில்லை என்றும் ஒரு நிறுவனமாக இருந்துவிட்டு வாய்மொழி சொல்லை நம்பி நான் வழக்கு போட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால்.சரியல்ல.

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.